[14th November 1957

காரணமாக அந்தப் படம் இப்போது வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்தைக்கொண்டாவது இந்த வீரர்களுடைய சரித்திரத்தை ஆராய்வ தற்கு சர்க்கார் முயற்சி எடுத்து ஆவன செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is a suggestion for action. I do not think it is a question, Sir.

MR. SPEAKER : The Hon. Minister is at perfect liberty not to answer it.

SRI N. K. PALANISAMI : வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆங்கில ஆதிபத்யத்தை எதிர்த்து 1797—1801 வரையில் நடத்திய போராட்டம் பற்றிய சரித்திரத்தை சர்க்காரே எழுதுவதற்கு முன் வருவார்களா ?

MR. SPEAKER : அவர் ரெகார்டுகளை வேண்டுமானால் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். நீங்களே அதைப்படித்து எழுதலாம்.

Fountain pen nib industry

*164 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. Minister for Industries be pleased to state the nature of the assistance the fountain pen nib industry at Sattur is receiving from the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : No application for financial assistance was received till now and therefore no financial assistance has been given by the Government to this industry at Sattur. But one of the four firms which are manufacturing nibs at Sattur has been granted import licence to import raw materials (stainless steel) from Canada.

SRI K. SATTANATHA KARAYALAR : சாத்தூர் தொழிற்சாலையில் செய்யப்படுகிற நிப்புகளில் " மேட் இன் யு. எஸ். ஏ. " என்று இருப்பதாகச் சொல்லப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த நிப்புகளில் " மேட் இன் யு. எஸ். ஏ. " என்று இல்லை, வெறும் யு. எஸ். ஏ. என்றுதான் இருக்கின்றன. இதைப் பற்றிக் கேட்டால் ஒரு கம்பெனி " யுனைட்டெட் சேல்ஸ் அசோசியேஷன் " என்பதாகவும், மற்றொன்று " உமா சங்கர் ஏஜென்ஸி " என்றும் பெயர் இருப்பதனால்தான் " யு. எஸ். ஏ. " என்று போட்டிருப்பதாகச் சொன்னார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. Minister tell us what happened to the industry started at Guindy to manufacture Parker pens and Parker ink?

THE HON. SRI R. VENKATARAMAN : That is a separate question and I will answer it if it is separately put.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய பணி மனைகளில் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகிற நிப்புகளை உபயோகிக்கப் படுகிறதா ? இந்த நிப்புகள் பம்பாயிக்கு அனுப்பப்பட்டு, அங்குள்ள பெரிய வியாபாரிகளால் மறுபடியும் தமிழ்நாட்டில் கொண்டுவந்து விற்பனை செய்யப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ? இப்படி இல்லாமல் இங்கேயே அதிகம் உபயோகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சி செய்துள்ளதா ?

14th November 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : இங்கே வெறும் நிப்புதான் தயார் செய்யப்படுகிறது. பேனா ஹோல்டர்கள் முதலியவை பம்பாயில் அதிகம் இருப்பதால் நிப்புகள் வரவழைக்கப்பட்டு அவற்றோடு பொறுத்தி இங்கே விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை ராஜ்யத்தில் தனியாக நிப்புகளை உபயோகப்படுத்திக்கொள்ள வசதி இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : இங்கே தயாரிக்கப்படுகிற யு.எஸ்.ஏ. என்று போடப்பட்டிருக்கும் நிப்புகள் முதல் தரமானவைகளாக இருப்பதால்தான் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதுபோல ஏமாற்றுவதற்காக இம்மாதிரி செய்யப்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்த நிப்புகளை முதல்தரமானதாக இருப்பதால் இனி வெளிநாட்டில் இருந்து தருவிக்கக்கூடிய இம்போர்ட் லைசென்ஸை கட்டுப்படுத்த சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : That is a matter which relates to the Central Government.

SRI V. SANKARAN : இந்த நிப்புகளில் உண்மையான இருடியம் தீட்டப்படாமல், மற்ற ஈயம்போன்ற உலோகங்களை தீட்டப்படுவது வாஸ்தவமா ? 9.30 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த உமாசங்கர் ஏஜன்சியிலும், யுனைட் சேல்ஸ் அசோசியேஷனிலும் இந்த நிப்புகள் ஸ்டேயின்லெஸ் ஸ்டீலினால் இருடியம் வைத்து செய்வதற்கு முயற்சிக்கப்படுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : நம் மூலதனத்தில் நல்ல நிப்புகள் செய்யும்போது, பார்க்கர் பைலட், வாட்டர்மென்ஸ் முதலிய வெளிநாட்டு கம்பெனிகளுக்கு நிப்புகள் செய்வதற்கு அனுமதி கொடுத்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி கேட்கும்போது நல்ல நிப்புகள் இங்கேயும் செய்யலாம் என்று சொன்னார்கள். ஆனால் இதைப்பற்றி ஒரு அபிப்பிராயமும் இல்லை. நல்லதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் நிப்புகள் அதிகமாக தேவைபடுவதால் புதிய கம்பெனிகள் வைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : சாத்தூரில் செய்யப்படும் நிப்புகளின்பேரில் யு.எஸ்.ஏ. என்று போட்டிருப்பதனாலே மாகாணத்திலுள்ள ஒரு அரசியல் கட்சி தங்கள் கட்சியை விளம்பரப்படுத்துவதற்காக " உதயசூரியன் அசோசியேஷன் " என்று சொல்வது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

MR. SPEAKER : I rule the question out of order.

Old Assembly Buildings at Government Estate

* 165 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) what the Government propose to do with the buildings in the Government Estate which were used for the Assembly from 1952 to 1956 ; and

(*b*) the total amount that was spent for constructing the Assembly Buildings in the Government Estate?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The question of the future use of the Assembly Building is under consideration.

(*b*) The total amount of expenditure incurred for construction of the Assembly Building is Rs. 9,24,609.